**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண். 112/2017</u>**

PW1 – திரு. சேசுராஜ் நாள். 04.01.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்து நத்தம் வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் தற்போது அவ்வாறு மாற்றப்பட்டுள்ளது, எனது தகப்பனார் கிரையம் வாங்கும்பொழுது விவசாய நிலமாக இருந்தது. தாவா சொத்தில் பழைய நத்தம் சர்வே எண். 90 சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 6 ஏக்கர் ஆகும். திருச்சி– இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலைக்கு மேற்கு பக்கம் ஒரு வாய்க்கால் உள்ளது என்றால் இல்லை. எனது கிராமத்தில் நெடுஞ்சாலைக்கு மேற்கு பக்கம் உள்ள வாய்க்காலில் தூம்பு அமைப்பது தொடர்பாக சில நபர்களுடன் எனக்கு பிரச்சனை ஏற்பட்டது என்றால் அவ்வாறு எதுவும் ஏற்பட்டதில்லை. மேற்படி தேசிய நெடுஞ்சாலைக்கு கிழக்கு பக்கம் ஊரணி உள்ளது என்றால் சரிதான். மேற்படி தேசிய நெடுஞ்சாலைக்கு மேல்புறம் உள்ள விவசாய நிலங்களில் இருந்து உபரி நீரானது மேலே சொன்ன வாய்க்கால் வழியாக தான் ஊரணிக்கு செல்கிறது என்றால் சரியல்ல, அது வாய்க்கால் அல்ல, காணு உள்ளது, அது தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது.

2. மேற்படி காணுவின் கிழமேல் அளவு 8 அடி இருக்கும் என்றால் சரியல்ல, 5 அடி இருக்கும். எனது பிராதில் சொல்லியுள்ள மேற்கு மாலில் கண்ட

சவரிமுத்து வகையறா இடம் என்பது தற்போது காலியாக இருந்து வருகிறது என்றால் முன்பு காலியாக இருந்தது, தற்போது 1ம் பிரதிவாதியின் மூத்த சகோதரி சின்னம்மாள் என்ற அந்தோணியம்மாள் அனுபவம் செய்து வருகிறார். சின்னம்மாள் என்ற அந்தோணியம்மாள் வீட்டின் தலைவாசல் தாவா சொத்தை நோக்கி கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரியல்ல, தெற்கு பக்கம் உள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் இருந்து அந்தோணியம்மாள் வீட்டிற்கு செல்ல வேண்டுமென்றால் தாவா சொத்து வழியாக தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரியல்ல, வேறு வழி உள்ளது.

3. அந்தோணியம்மாள் வீட்டின் தலைவாசல் கிழக்கு உள்ளது என்றும் நெடுஞ்சாலையில் இருந்து தாவா சொத்திற்கு அந்தோணியம்மாள் வீட்டின் வழியாக தான் செல்ல வேண்டும் என்றும் வழக்கிற்காக அவ்வாறு இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அந்தோணியம்மாள் வீடு கட்டியுள்ள இடமானது 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சவரிமுத்துவிற்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றும் அவருக்கு கிரையம் பாத்தியப்பட்ட சொத்து என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சவரிமுத்துவிற்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் தான் அவருக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரியல்ல. அந்தோணியம்மாள் வீட்டிற்கு மேற்கு பக்கத்தில் சந்தியாகு அம்மாள் சொத்து உள்ளது என்றால் சரிதான், அவரது வகையறா சொத்து உள்ளது.

4. அந்தோணியம்மாள் வீடானது முன்பு ஓட்டுவீடாக இருந்து பின்பு தார்சு வீடாக கட்டப்பட்டு உள்ளது என்று சொன்னால் சரியல்ல, முன்பு கூரைவீடாக இருந்தது, பின்பு தார்சு வீடு கட்டப்பட்டது. மேற்படி தார்சு வீடானது 2009ம் ஆண்டு அந்தோணியம்மாளால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல, எப்பொழுது கட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி கூரைவீடானது எப்பொழுது கட்டப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அந்தோணியம்மாள் கூரைவீடு கட்டிய விவரம் எனக்கு எப்பொழுது தெரியும்

என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தில் தெற்கு மாலில் குறிப்பிடப்பட்டுள்ளது எனது வீடு என்றால் சரியல்ல, தற்போது தோட்டமாக இருந்து வருகிறது. மேற்படி தெற்கு மாலில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 371/34, 371/35, 371/36 ஆகும். மேற்படி தெற்கு மாலில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 6 செண்ட் இருக்கும. தெற்கு மாலில் சொல்லப்பட்டுள்ள சொத்திற்கு தெற்கு பக்கம் கிழமேல் வீதி உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிழமேல் வீதிக்கு தெற்கு பக்கம் எனது வீடு உள்ளது என்றால் சரிதான்.

5. சர்வே எண். 90/1 சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது பிராதில் சொல்லியுள்ள குழந்தைச்சாமி என்பவருக்கு சர்வே எண். 90/1 சொத்தில் எவ்வளவு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் கிழமேல் 12 அடியும், தென்வடல் 35 அடியும் பாத்தியப்பட்டதாகும். கிழமேல் 12 அடி, தென்வடல் 35 அடி உள்ள சொத்தில் தான் குழந்தைச்சாமி விவசாயம் செய்து வந்தாரா என்றால் சரிதான், மேற்படி சொத்தை எனது தகப்பனார் குழந்தைசாமியிடமிருந்து 1970ம் ஆண்டு கிரையம் வாங்கிவிட்டார். மேற்படி குழந்தைசாமிக்கு மேற்படி சொத்து எவ்வகையில் பாத்தியப்பட்டு இருந்தது என்றால் குழந்தைசாமிக்கு அவரது தந்தை மூலம் பாத்தியப்பட்டதாகும். குழந்தைசாமியின் உடன்பிறந்தவர் எத்தனை நபர்கள் என்றால் மைக்கேல் என்ற ஒரு நபர் ஆவார். குழந்தைசாமியும், அவரது சகோதரர் மைக்கேலும் அவரது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. சர்வே எண். 90/1 சொத்தில் மரியஆரோக்கியம் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து எவ்வளவு என்றால் கிழமேல் 10 அடி, தென்வடல் சுமார் 25 அடி பாத்தியப்பட்டதாகும். மேற்படி மரியஆரோக்கியத்திற்கு கிழமேல் 10 அடி, தென்வடல் சுமார் 25 அடி எவ்வகையில் பாத்தியப்பட்டது என்றால் மூதாதையர்

வழி சொத்தாகும். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் வழக்கு சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண். 90/1 குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி மரியஆரோக்கியத்துடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் அவரது உடன்பிறந்தவர்களை பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 90/1 சொத்தில் தைனீஸ்வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றும், தைனீஸ்வகையறா என்றால் யாரை குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால்  தைனீஸ் உடன் பிறந்த சகோதரியை வகையறா என காட்டப்பட்டுள்ளது.

7. மேற்படி தைனீஸ் வகையறாவிற்கு சர்வே எண். 90/1 சொத்தில் எவ்வளவு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் கிழமேல் 20 அடி, தென்வடல் 35 அடி பாத்தியப்பட்டு இருந்தது. எனது பிராதில் சொல்லியுள்ளவாறு சர்வே எண். 90/1 சொத்தில் மரியஆரோக்கியத்திற்கும், தைனீஸ் வகையறாவிற்கும் எந்த பாத்தியமும் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் மைக்கேல்உடையார் மற்றும் அவரது சகோதரர் இன்னாசி உடையார் அவர்களது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எப்பொழுது பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரியாக ஞாபகமில்லை. இன்னாசிஉடையாரின் வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். என் உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 3 சகோதரிகள் ஆவார்கள், எனது சகோதரிகள் உயிருடன் உள்ளனர். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3 இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த விவரம் மேற்படி பத்திரம் எழுதியபோதே எனக்கு தெரியுமா என்றால் 2017ம் வருடம் 1ம் பிரதிவாதி சொன்னதின் அடிப்படையில்தான் தெரிந்து கொண்டேன்.

8. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த இனாம் செட்டில்மெண்டை பற்றி எழுதி கொடுத்த காலத்திலேயே எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக 2017ம் ஆண்டு  தான் தெரியும் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சூசைமாணிக்கம் பாதிரியாக

உள்ளார் என்றால் சரிதான். மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் 2ம் பிரதிவாதி பாதிரியாராக இல்லை என்று சொன்னால் சரியல்ல, அதற்கு முன்பில் இருந்தே பாதிரியாராக இருந்து வருகிறார். பிரதிவாதிகள் இருவரும் விவசாய குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தான சர்வே எண். 371/47 சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏர்ஸ் ஆகும்.

9. நான் வழக்கு தாக்கல் செய்தபோது சர்வே எண். 371/47 சொத்து நத்தமாக வகைப்பாடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தின் கிழமேல், தென்வடல் அளவுகள் என்ன என்றால் சுமார் கிழமேல் 42 அடியும், தென்வடல் 35 அடியும் இருக்கும். சர்வே எண். 371/47 சொத்தின் மொத்த விஸ்தீரணம் 120 சதுரமீட்டர் என்றால் அதை பற்றி சரியாக தெரியாது. சர்வே எண். 371/47 சொத்திற்கு வடக்கு பக்கம் இன்னாசி மற்றும் தைனீஸ் சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல, மேற்படி சொத்துக்கள் தாவா சொத்துக்குள் கட்டுப்பட்டது ஆகும். தாவா சொத்தின் வடக்கு மாலில் சி.இன்னாசி இடம் உள்ளது என்றும், அதற்கு வடக்கு பக்கம் ராயர் என்பவரின் இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சி.இன்னாசி இடத்திற்கு வடக்கு பக்கம் என்ன உள்ளது தேசிய நெடுஞ்சாலை உள்ளது.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஒம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை